உ

சிவராமஜெயம்.

13

முன்னோராலியற்றிய

# ஜீவானந்தக்களிப்பு.

இஃது,

சிறுமணவூர்,

## முனிசாமிமுதலியா

ரவர்களால் இயற்றப்பட்டு,

தமது

சென்னை சூளை,

சிவகாமிவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1905.

உ

கடவுள்துணை.

# ஜீவானந்தக்களிப்பு.

## விநாயகர்துதி.

கலிவிருத்தம்.

ஞாலமெட்டுத்திசையும்பரவிய
ஆலவட்டமமர்ந்தகடவுள்சேய்
கோலவட்டக் குழந்தைமதிமுக
மூலவட்டமுதற்பொருள்போற்றுவாம்.

நேரிசை - வெண்பா.

தன்னைத்தானுணருத் தாரொளித்தமானிடருக்
கென்னத்தான்சொல்வே னெங்கோவே-உன்னைத்தான்
தானெனபானுரோ தானுரோநீயாரோ
நானென்னும்பேரே னவில்.

ஆனந்தக்களிப்பு.

பல்லவி.

உன்னையே நீயெண்ணிப்பாரு-இந்த
உலகத்திலெதுசொந்தம் யோசித்துக்கூறு (உன்)

சரணங்கள்.

அன்னைக்கருவிந்துநாதம்-கொண்டு
ஆடுமுடலுக்கு மண்ணென்னபேதம்
பின்னைவளர்த்திடும் சாதம்-யிடை
பின்கலைசுவாசம் தடைப்பட்டால்மோசம் (உன்)

தாயுந்தகப்பனிரவல்-அன்று
தாலிகட்டிக்கொண்ட பெண்டீருமிரவல்
சேயும்பொருளுமிரவல்-மற்ற
ஜெகமெட்டுதிக்குஞ் செங்கோலுமிரவல் (உன்)

சோலையும்வாவியுமிரவல்-நல்ல
சொகுசானகட்டட மாளிகையிரவல்
மேலைவெகுபூச்சுமிரவல்-ஜீவா
மெத்தவதிகார உத்யோகமிரவல் (உன்)

அண்ணனுந்தம்பி யிரவல்-உந்தன்
ஆசைக்கொழுந்தியு மாமியிரவல்
கண்ணுக்குபுருவ மிரவல் உந்தன்
கையில்பௌத்திர மோதிரமிரவல் (உன்)

பெட்டியும்பேழை யிரவல்-பிறர்
காணாமல்சேர்க்கும் பணமுமிரவல்

கட்டியசோமனிரவல் நாளை
கட்டிக்கொண்டுபோகும் பாடையிரவல் (உன்)
தோப்புந்தடாகமிரவல்-உனக்கு
துரைத்தனத்தார்தந்த மானியமிரவல்
காப்புகொலுசுமிரவல்-நாளை
காஷ்டத்திலெண்ஜா னிடமுமிரவல் (உன்)
பட்டுபட்டாளி சேலையிரவல்
பாயுந்தலையணை யிரவல்-நல்ல
தோயும் சுகந்தமிரவல்-தினம்
தோத்திரம்செய்திடும் மந்திரமிரவல் (உன்)
தாலிச்சரடுமிரவல் தீட்டும்
தலைக்கெண்ணைசாந்து மைபொட்டுமிரவல்
மாலைச்சரடுமிரவல் தீட்டும்
மஞ்சளுங்குங்குமம் தானுமிரவல் (உன்)
தங்கநகையுமிரவல் தரை
தன்னூற்புதைத்த புதையுமிரவல்
செங்கைவளையுமிரவல்-தந்த
சிப்புசிக்கங்கோல் சவுரியிரவல் (உன்)
பஞ்சணைமெத்தை யிரவல்-யிந்த
பாழானகட்டைக்கு வாபனையிரவல்
மிஞ்சியரணுயிரவல்-மெத்த
மின்னுக்குங்கடுக்க னுடுப்புமிரவல் (உன்)
தண்டைசதங்கை யிரவல்-மற்ற
தாவடம்வாசனை பூவடமிரவல்
கொண்டைமினுக்கு மிரவல்-நாளை
கூட்டிக்கொண்டுபோகும் சங்குமிரவல் (உன்)

ஜீவானந்கண்ணி தெலுங்கு.

இ-ம்-அபுரூபம்-ஏகதாளம்.

சில்லராள்ளுநீவும்ரொக்குசு நுண்டே
சித்தமுசெடிபோ ஞெரேஒரே-நீ
சித்தமுனுண்டெதி சின்மயஜோதிநீ
சூசுகனுண்டெதி சரேசரே 1
மாயபிரபஞ்சமு மாடலுவிண்டே
மதியுனுசெடிபோ ஞெரேஒரே-நீ
மதியிலோனுண்டே மர்மகாந்துனி
சூசுகனுண்டெதி சரேசரே 2
ஒக்கபொத்துறு பெண்டுகனுண்டே
ஒணரகசெடிபோ ஞெரேஒரே

ஒணருவனுண்டே வைபவநாதுனி
சூசுகனுணடெதி சரேசரே 3
நீளலோமுனுகுசு வனுகுசுனுண்டே
நெலகடசெடிபோ ஞெரேஒரே
நெலகடலுண்டே நிர்மலஜோதினி
சூசுகனுண்டெதி சரேசரே. 4
பூமிலோஅடிவிலோ திருகுசுனுண்டே
புத்தியுசெடிபோ ஞெரேஒரே
புத்தியுனுண்டே புன்னமசந்த்ருநி
சூசுகனுண்டெதி சரேசரே 5
சுல்லரதெய்வமுல் கோருசுநுண்டே
ஜிம்ஹமுசெடிபோ ஞெரேஒரே
ஜிம்ஹமுலுண்டே சர்வேஸ்வருநீ
சூசுகனுண்டெதி சரேசரே 6
வீரையசெப்பின வாக்குனம்மிநீ
விவரமுதெலுசுனு ஞெரேஒரே
விவரமுனுண்டே வீருனிகீர்த்தனல்
செப்புசுனுண்டெதி சரேசரே. 7

தமிழ்.

சிலைகளைக்கல்களைத் தொழுதுக்கொண்டிருந்தாழ்
சித்தங்கலையுமது பிரீபிரீ-உன்
சித்தத்திலிருக்கும் சின்மயஜோதியை
பார்த்துக்கொண்டிருப்பதேசரிசரீ 1
மாயப்பிரபஞ்சத்தில் மாய்கையிலுழன்ருல்
மதியுங்கலையுமதை பிரிபிரீ-உன்
மதியினுள்ளிருக்கும் மாயா்ஜோதியை
பார்த்துக்கொண்டிருப்பதேசரிசரீ 2
ஒருபொழுதுகள்சில விரதங்களிருந்தால்
உணர்வுகலையுமதை பிரிபிரீ-உன்
உணர்வுக்குள்ளிருக்கும் ஒருதனிஜோதியை
பார்த்துக்கொண்டிருப்பதே சரிசரீ 3
நீர்பலகெங்கையில் முழிகிக்கொண்டிருந்தால்
நினைவுகலையுமதை பிரிபிரீ-உன்
நினைவுக்குள்ளிருக்கும் நின்மலஜோதியை
பார்த்துக்கொண்டிருப்பதே சரிசரீ 4
பூமியில்மலைகளில் திரிந்துக்கொண்டிருந்தால்
புத்திகலையுமதை பிரிபிரீ-உன்
புத்தியிலிருக்கும் பூரணசந்த்ரனை
பார்த்துக்கொண்டிருப்பதேசரிசரீ 5

பலபலதெய்வத்தை பணிந்துக்கொண்டிருந்தால்
பக்திகலையுமதை பிரீபிரீ
பக்திகொடுக்குமுந்தன் சித்தசொரூபனை
பார்த்துக்கொண்டிருப்பதே சரிசரீ 6

இ-ம்-இந்துஸ்தானி-ஏகதாளம்,

பல்லவி,

மலைத்துமலைத்துடலை மதிக்குறாய்நெஞ்சே
மதியமுதுண்டவன்போல் களிக்குறாய்பஞ்சே

சரணங்கள்

சிலையாயிருப்பா செம்பாவுன்னுடம்பு
சீச்சீயிருகலையின் சாற்றடங்கினால்வம்பு
வலைபோல்வுடலெங்கும் வழிசிறுநரம்பு
வைத்துப்பின்னியசொத்தை கட்டைக்காகவாதெம்பு(மலை)
கட்டுமரத்தைநம்பி கடலிழந்தவன்போலே
கலங்குதேபிராணனுன்னுள் காற்றின்துரும்பைப்போலே
கெட்டுப்போகாதேசொன்னேன் கெடுவிலைமணமேலே
கிடத்திக்கொளுத்துமுன்னே கழிக்காதேவீண்ணாளே(மலை)
காமாதியசுகத்தில் கடக்குறாய்தினத்தை
காலன்தினமெடுத்து பார்க்குறான்கணக்கை
தாமதித்திருக்காதே தன்னுதென்றுபிணத்தை
தையலர்க்கிடுசரக காமிந்தயினத்தை(மலை)
பணம்பொருளாஸ்தியுடன் பாதைவராது
பாவபுண்ணியங்கடை மட்டும்விடாது
பிணமாகும்போதுயிரைப் பிடிப்பவரேது
பிள்ளையேனும்சுடலை தாண்டிவராது(மலை)
அருணையம்பதிவளர் அற்புதசோதி
அயன்மால்தேடிடுங் கறையிலாவாதி
சிறுமணவூர்முனி சாமிசொல்நீதி
ஜெகத்துளோர்க்கெவ்வித மோயிந்தசேதி(மலை)

4-வதுகீர்த்தனை

உத்ததிரா யீத்திரேகம்மன
ஊரிகிராரரா போதா
தாரிலோபல தையாலுன்னதி
தாடுகாரரா தீடுகேபோதாம் (உத்)
சத்திமாயலசேதா-மன
சீதாறுமுனிகாதா
என்னடிகன்னபொய்யேதன்ன
சக்ககரரா சிக்கினசாமி (உத்)

ஆலிபில்லலெவரு-வா
ரெவருருருமனகு
அங்கடிபோதிமி தொங்கடிதெஸ்திமி
தொங்கலுவொச்சி தோசுக்பொய்யதி -உத்)

கோடகோடகோடாமன
ரங்கடுகில்சின கோடா
வக்சிரதேகமு இச்சிரிதானமு
மெச்சிரிநீயோக தாரகனுமமு (உத்)

இராகம்-கண்ணிகள்.

ஆக்கையுன்னுதோ-அல்லவென்றால்
ஆவியுன்னுதோ
ஆக்கையென்னுதென்று யாருஞ்சொல்லவில்லை
காக்கைகழுநரி கார்க்கின்றதேதெல்லை (ஆக்)

புத்ரருன்னுதோ-பலபலவாம்
பொருள்களுன்னுதோ
புத்ரரென்னுதென்று புகழ்ந்திருக்குங்காலை
சுத்திகுடமுடைத்தோடும்அதேவேலை (ஆக்)

வீடுமுன்னுதோ-தேடும்பொருள்
விருதுமுன்னுதோ
வீடுமுன்னுதென்று வீம்பேனிப்பொய்நாட்டில்
கூடும்ஜெனம்நாளை கொளுத்தும்சுடுகாட்டில் (ஆக்)

இன்னஞ்சொல்லவோ-உன்னுலைதான்
உணரவில்லையோ
பன்னுந்தமிழ்ப்பா வலர்களடிப்பொடி
என்னுஞ்சிறுவன் முனிசாமிசொற்படி. (ஆக்)

விருத்தம்.

சொல்லிறந்தவிடமெங்கே முப்பாழெங்கே
துவாரபாலகரெங்கே முதற்பாழெங்கே
நல்லசங்குநதியெங்கே வைகுந்தமெங்கே
நாரணனும்ஆலிலைமேல் படுத்ததெங்கே
அல்லல்படுமைம்பூத மொடுக்கமெங்கே
ஆறஞ்சுயிதழ்ரெண்டு முளைத்ததெங்கே
சொல்லவல்லாருண்டானு லவரைநாமும்
தொழுதுகுருவெனப்பணிந்து துதிக்கலாமே. 1

சொல்பத்தாம்வாசல் அறுகோணமுப்பாழ்
துவாரயிந்திரிய முதற்பாழேசுழியுமாகும்
நல்லநதிவைகுந்தம் அறுகோணந்தான்
நாரணனும்ஆலிலையில் நின்றாடும்பாதம்
அல்லல்படும்ஐம்பூதம் சுழிக்கீழ்வாசல்
ஆறஞ்சுயிதழ்ரெண்டும் அந்தமாகும்
சொல்லாதபராபரத்தில் .சார்ந்துச்சொன்னோம்
சொல்லிவிட்டேன்புலஸ்தியா அறிந்துகொள்ளே

உந்தியெனும்நிலையெங்கே அறுகோணமெங்கே
ஓங்காரநிலையெங்கே வுற்றவிடமுமெங்கே
மந்திரமுஞ்சாஸ்திரமும் பிறந்ததெங்கே
மறைநூலகளவிதித்தவயன் தானுமெங்கே
முந்திவருங்கணபதியு மொழிந்தவிடமுமெங்கே
முக்கோணமுனையெங்கே யடிதானெங்கே
இந்தவகைபொருளறிந்து சொல்வார்பாதம்
யிறையவனென்றேகருதி யியம்பலாமே 2

உந்தியெனும்வாசல்அறுகோணம்விசுத்தி
ஓங்காரமுதித்தங்கே காட்டும்காட்டும்
மந்திரமுஞ்சாஸ்திரமும் அம்பரத்தில்
மறைநூல்கள்விதித்தவன்பூரகத்தில்
முந்திவருங்கணபதிமூலாதாரம்
முக்கோணத்தடிமுடியும் சுழிக்கீழ்மேலே
இந்தவகைபொருளையெல்லாம் பராபரவிருப்பை
இனிகண்டுனானுறைத்தேன் தெளிந்துகொள்ளே

ஆதிக்திற்சந்திதனும் பிறந்தவிடமுமெங்கே
அவரொடிங்கிநின்றநிலை தானுமெங்கே
சாதிவேறானதெல்லா மொன்றானதெங்கே
சத்திசிவமென்று பிரியாததெங்கே
ஜதியுணர்ந்தேதீசை யொழிந்ததெங்கே
வுச்சிட்டதீட்டகந்த விடமுமெங்கே
சோதிபெறஞானமொழி பெற்றபேர்கள்
சொல்லியதெல்லாம் உடலிற்றெளிந்துகாணே 3

ஆதிகற்சந்திரன்பின் இடைகலைதான்
அவரொடிங்கிசுழிமுனையி னுன்றாரப்பா
சாதிஒன்றாய்கண்டதுசுழியுமாகும்
சத்தசிவம்பிரியார்கள் சுழியிலேதான்

ஓதியதோர்பூசையது யெல்லைவாசல்
வுச்சிட்டதீட்டமில்லையெல்லைவாசல்
சோதிபெறுஞான மொழிபராபரத்தில்
செப்புகிறேன் உடல்தனில்தெளிந்துகொள்ளே
சற்குருவுஞ்சாநிதியுமானதெங்கே
சாகாதகாலெங்கே தலையுமெங்கே
முப்பொருளுமொருபொருளாய் நின்றதெங்கே
முனையெங்கே தலையெங்கே மோகமெங்கே
நற்கமலமாயிரத்தெட்டிதழுமெங்கே
நாலுவகையொருபாத மானதெங்கே
இப்புவியில்பொருளறிந்து சொல்வார்தம்மை
யிறையவனென்றேகருதி யியம்பலாமே 4

சற்குருவும்பராபரமுஞ் சன்னதியின்சூழும்
சாகாக்கால்வேகாத்தலை வாசியாச்சு
முப்பொருளும்அவ்வும்உவ்வும் ஓங்காரந்தான்
முனைமூலந்தலைநடுவும் மோகம்பாழு
நற்கமலமாயிரத்தெட்டிதழேதேவி
நாலுவகைஒருபாதம் பூரணந்தான்
இப்புவியில்பராபரத்தின் அருளால்தானும்
இருப்பெல்லாஞ்சொல்லிவிட்டேன் அறிந்துகொள்ளே

நஞ்சணிந்தயீசன்முகந் தானைந்துமெங்கே
ஞானக்கண்மற்றக்கண் இரண்டுமெங்கே
அஞ்சுவுயிர்தனைகொடுப்போம் யேமனெங்கே
வாயிரக்கண்ணிந்திரனார்தானுமெங்கே
பஞ்சறிவால்நின்ற பராசத்தியெங்கே
பதினாலுலோகமெனுந் தானமெங்கே
வஞ்சமறயிப்பொருளை சொல்வார்தம்மை
வணங்கிகுருபரனென்று வாழ்த்தலாமே 5

நஞ்சணிந்தோன்முகமஞ்சும் பஞ்சறிவுமாகும்
ஞானக்கண்மற்றக்கண் தூலமாகும்
அஞ்சுவுயிர்கொடுபோகும் யேமன்தான்ருத்ரன்
ஆயிரக்கண்ணிந்திரனே தேவிதேவி
பஞ்சறியாய்பராசத்தி அகாரம்உகாரம்
பதினாலுலோகமெல்லாம் அதினாலாகும்
வஞ்சமில்லாபராபரதனை சார்ந்துநாமும்
வகுத்துவிட்டோம்நன்றாக அறிந்துகொள்ளே

ஜீவானந்தக்களிப்பு முற்றிற்று.